

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (16.6.2025) திருச்சிராப்பள்ளியில், மிளகுப்பாறை அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவி த. ராகினி, தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வில் (CLAT) தேர்ச்சி பெற்று ஜபல்பூரில் உள்ள தர்மசாஸ்திரா தேசிய சட்ட பல்கலைக் கழகத்தில் பயில தேர்வாகிவுள்ளதையொட்டி வாழ்த்துப் பெற்றார். அப்போது, முதலமைச்சர் அவர்கள் அம்மாணவிக்கு சால்வை அணிவித்து சிறப்பித்து, தன்னுடைய பேனாவை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உடனிருந்தனர்.




ஈரோடு வடக்கு மாவட்ட கழக அலுவலக திறப்பு விழா மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் மாநிலங்களவை உறுப்பினரும், கழக துணை பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராசு கழகக் கொடி ஏற்றினார். ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் அமைச்சருமான சு. முத்துசாமி அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### ‘கிளாட்’ தேர்வில் வெற்றி பெற்று– நாக்பூர் தேசிய சட்டப் பல்கலையில் பயில்வதற்குத் தேர்வு!

# “புதுமை pen” பெற்ற ”புதுமைப்பெண்” ராகினி!

### வெற்றிகள் குவிக்க – பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்து!

சென்னை, ஜூன் 18 –

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ‘எக்ஸ்’ தள பதிவு வருமாறு:

“CLAT தேர்வில் வெற்றி பெற்று நாக்பூர் தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்குத் தேர்வாகியுள்ளார். திருச்சி மிளகுப்பாறை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மாணவி ராகிணி.

தஞ்சாவூர் மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு திருச்சி திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் காண்பதற்குத் திரண்டிருந்த பொதுமக்கள், கழகத் தொண்டர் களுக்கு நடுவே நின்றிருந்தார் ”நான் முதல்வன்” உருவாக்கிய புதுமைப்பெண் ராகிணி.

மாணவியைக் கண்ட முதலமைச்சர் அவர்கள், தனது பேனாவை வழங்கி, பொன்னாடை அணிவித்து வாழ்த்துகள் கூறி மகிழ்ந்தார்.

“புதுமை pen” பெற்ற ”புதுமைப் பெண்” ராகிணியின் கல்விப்பயணம் மிகச்சரியான இலக்கை எட்டி, பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகள்.”

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு - கடந்த 4 ஆண்டுகளில் மட்டும்

# மாணவி கிருத்திகா போல 900க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் - தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வு!

### பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!



சென்னை, ஜூன் 18-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ‘எக்ஸ்’ தள பதிவு வருமாறு:-

“மாணவி கிருத்திகா கல்வியால் பெற்ற வெற்றியை அவ்வூர் மக்கள் அன்பொழுகக் கொண்டாடுகிறார்கள்.

அந்தக் கொண்டாட்டத்தில் நாங்களும் மகிழ்ச்சி அடைகிறோம்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகான நான்கு ஆண்டுகளில் மட்டும் மாணவி கிருத்திகாவைப் போல 900க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வாகியுள்ளார்கள்.

இந்நேரத்தில் அம் மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கூடவே பயணிக்கிறோம். மகிழ்ச்சியோடும் தன்னம்பிக்கையோடும் படியுங்கள்.”

இவ்வாறு அப்பதிவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யமொழி பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.



நாகை மாவட்டம் நாகை நகர பொறியாளர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாகையில் உள்ள அன்பு இல்லத்திற்கு தேவையான ஆர்.ஓ. வாட்டர் பிளாண்ட் மற்றும் அங்கு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வழங்கினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் வி.செந்தில், நகர பொறியாளர் அணி அமைப்பாளர் விக்னேஷ் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர், கழகதலைவர் தஞ்சையில் புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி தருமபுரி நகர பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ் மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேந்திரன், வட்டார போக்குவரத்து அலுவலர் ஜெயதேவ்ராஜ், முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.சுப்ரமணி, நகர மன்ற தலைவர் லட்சுமி மாது,நகர செயலாளர் நாட்டான். மாது,மோட்டார் வாகன ஆய்வாளர் தரணீதர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூரில் கலைஞர் பிறந்த நாள் விழா!

பெரம்பலூர், ஜூன் 18 -

பெரம்பலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு,

கௌதமபுத்தர் அறக் கட்டளையில் உள்ள 110 குழந்தைகளுக்கு போர்வை, பாய், துண்டு மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்களையும் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் வழங்கப்பட்டது. இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர் எம். இராஜ்குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன்,

தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் விஜய், சுதா, தினேஷ், சிவனேசன், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆனந்தன், சுல்தான, கலைச்செல்வன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.வடிவேல் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மத்திய, ஜோலார்பேட்டை மேற்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, திருப்பத்தூர் வடக்கு, மாதனூர் மேற்கு, கந்திலி கிழக்கு, கந்திலி மத்திய, கந்திலி மேற்கு ஆகிய ஒன்றியங்களிலும், ஆம்பூர் கிழக்கு, ஆம்பூர் மேற்கு, வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு ஆகிய நகரங்களிலும், உதயேந்திரம் பேரூரிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 18.06.2025 | அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் | குப்பம்பாளையம் | எஸ்.மேகநாதன், கு.முரளிகிருஷ்ணன் |
| 2 | | குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் | கொல்லமங்கலம் | |
| 3 | | மாதனூர் கிழக்கு ஒன்றியம் | மாதனூர் | |
| 4 | 19.06.2025 | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் | 102–ரெட்டியூர் | ஆரணி அ.பாலமுருகன், த.கங்கா |
| 5 | | ஆலங்காயம் மத்திய ஒன்றியம் | வளையம்பட்டு | |
| 6 | | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் | இளைய நகரம் | |
| 7 | 20.06.2025 | கந்திலி தெற்கு ஒன்றியம் | கெஜல்நாயக்கன்பட்டி | கந்திலி கரிகாலன், ஜா.முஹம்மத் ஜபீர் |
| 8 | | திருப்பத்தூர் நகரம் | புதிய பேருந்து நிலையம், திருப்பத்தூர் | |
| 9 | | ஜோலார்பேட்டை நகரம் | மேட்டு சக்கரக்குப்பம் | |
| 10 | 21.06.2025 | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | இருணப்பட்டு | குடியாத்தம் புவியரசி, வி.வேல்முருகன் |
| 11 | | ஆலங்காயம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | |

திருப்பத்தூர்

நாள் : 16-06-2025

